## "சிறுவர் நெறிபிறழ்வு: காரணங்களும், விளைவுகளும் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவினை மையப்படுத்திய ஒரு சமூகவில் ஆய்வு"


**Supervisor**
*Mr. SM. Ayoob,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Mr. AMM. Aazak,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*



சிறுவர்கள் பற்றிய ஆய்வுகள் மிகவும் முக்கியமானதாகவும், எல்லோராலும் பேசப்படுகின்ற செல்லாடலாகவும் காணப்படுகின்றது. சிறுவர் நெறிபிறழ்வானது இன்று அபிவிருத்தி அடைந்த, அடைகின்ற, அடையாத நாடுகளில் சமய, இன, மொழி, சாதி பேறுபாடின்றி அதிகரித்து வருகின்றது. "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற கருத்துக்கு ஏற்ப சிறுவர் நெறிபிறழ்வால் நாளைய சமூதாயத்தின் எதிர்காலம் அழிவை நோக்கியதாகவே மாறிக்கொண்டு வருகிறது. சிறுவர் நெறிபிறழ்வு என்பது ஒரு சிறுவன் சாதாரண சமூக வாழ்கையிலிருந்து எப்போது தனியாக அமைகின்றதோ அப்போது நெறிபிறழ்வு இடம் பெறுகின்றது. இதனால் சிறுவர்கள் சமூகத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு காரணமாக அமைகின்றது. அந்தவகையில் அம்பாரை மவட்டத்தில் அமைந்துள்ள கல்முனை முஸ்லிம் பிரதேச செயளாலர் பிரிவில் நெறிபிறழ்வான சிறுவர்களை அடையாளம் காணமுயல்வதுடன் அதற்கான காரணங்களையும் இனங்கண்டு அவற்றை சமூகத்தில் தடுப்பதற்கான முன்மொழிவுகளை விதந்துரைக்களை இவ்வாய்வு கட்டுரை நோக்கியுள்ளது. கல்முனை முஸ்லிம் பிரதேச செயளாலர் பிரிவில் சிறுவர் நெறிபிறழ்வில் எவ்வாறான காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை கண்டறிவதையும், அதன் பாதிப்புகளை சுட்டிக்காட்டுவதோடு அதனைக்குறைப்பதற்கான வழிமுறைகளையும், நுட்பங்களையும் முன்வைப்பதையடிப்படையாக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படையில் இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), பேட்டி காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக்குழுவுடனான கலந்துரையாடல், (Focus group Discussion) மற்றும் விடய ஆய்வு (Case Study) போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன. 50 வினாக்கொத்துக்கள் நெறிபிறழ்வான சிறுவர்களிடம் பனிப்பந்து மாதிரியைப் பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இனங்காணப்பட்ட எட்டு சிறுவர்களை கொண்டு விடய ஆய்வும் 03 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவு சேகரித்தலில்இ பிரதேச செயலக அறிக்கைகள்இ சமூக அய்வு மைய வெளியீடுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு எண்ணளவிலான மற்றும் தர அளவிரான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக கல்முனை முஸ்லிம் பிரதேச செயளாலர் பிரிவில் சிறுவர் நெறிபிறழ்வு அதிகரித்துள்ளதுடன் சிறுவர் நெறிபிறழ்வுக்கும் குடும்பங்களின் உடைவிற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது என்பதையும் இவ்வாய்வு முடிவாக உரைக்கின்றது.



***Key words:*** சிறுவர் நெறிபிறழ்வு, இளங்குற்வாளிகள்